கற்பகம் திங்கள் இதழ்
KATPAKAM
விலை ரூபா 10/-
மலர்-02 ஏப்ரல்-2009 இதழ்-18

### குறளமுதம்-18

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-2 - அறத்துப்பால் - வான் சிறப்பு**

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு"

*மழை பெய்யாவிட்டால் இவ்வுலகில் வானோர்க்காக நடக்கும் ஆண்டுத் திருவிழாவோடு அன்றாடப் பூஜையும் நடைபெறாது..*

பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள்

# மரநடுகைத் திட்டத்திற்கு பெரும் பங்காற்றி உள்ளன!

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பாராட்டு

"இன்று பயிர் நடுவோம் நாளை பயன் பெறுவோம" எனும் செயற்திட்டத்தின் கீழ் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் முன்னெடுத்த மரநடுகை நிகழ்வில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பங்களிப்பை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளன என்று யாழ்.கூ.அ.உ.ஆணையாளர் பொ.சிவலிங்கம் பாராட்டியுள்ளார்.

புதுவருட தினத்தை முன்னிட்டு வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாச வளாகத்தில் நடைபெற்ற மரம் நடுகை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு பாராட்டினார்.

சமாசத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையின்போது சமாசம் சுமார் 10 இலட்சம் பனம் விதை நடுகைத் திட்டத்தை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தது. அதன் தொடர்ச்சியாக கூட்டுறவுத் திணைக்களத்தால் செயற்படுத்தப்பட்ட மரநடுகைத் திட்டத்தில் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசம், கொத்தணிகள், சங்கங்கள் ஆகியன கணிசமான அளவு மரங்களை நாட்டியுள்ளமை பாராட்டுக்குரிய ஒரு செயலாகும்.





நாடு தழுவிய ரீதியில் சுமார் 20 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் சுமார் 5 ஆயிரம் மரக் கன்றுகள் வரை நாட்டியுள்ளன என்று தெரிவித்தார்.

இம்மர நடுகைத் திட்டத்தில் தென்னங்கன்றுகள், கஜு மரங்கள், கமுகு மரங்கள், வாழை, மாமரம், பலா மரம் போன்ற பல்வேறு வகையான மரங்கள் ஒவ்வொரு சங்கங்களின் வளாகத்திலும் நாட்டப்பட்டன.

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச. சமாசத்தின் அனுசரணையில் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள வளாகத்தில் கூ.அ.உ.ஆணையாளர், மற்றும் கூட்டுறவு அ.உத்தியோகத்தர்கள் மரங்களை நாட்டி வைத்தனர்.

### சிந்தனைத்துளி

*"நான், எனது என்ற' எண்ணங்களை அறவே கைவிட்டு நாம், எமது என்ற நிலையில் செயற்படுவது சிறந்த மார்க்கமாகும். என்பதை கூட்டுறவாளர்கள் சிந்தித்துக்கொள்ள வேண்டும்"!*

-அறிஞர்-

## கற்பகக்கரு

### மரநடுகை!

யாழ். மாவட்டத்தில் உள்ள ப.தெ.வ.அ.கூ. சங்கங்கள் தத்தமது வளாகத்தில் மரம் நடுகைத் திட்டமொன்றை சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு வெகு விமரிசையாக நடைமுறைப்படுத்தியுள்ளது.

இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப "இன்று பயிரிடுவோம், நாளை பயன் பெறுவோம்" என்னும் மகிட வாக்கியத்தை முன்னிறுத்தி மாவட்டத்திலுள்ள சுமார் 50ற்கு மேற்பட்ட கூட்டுறவு நிறுவனங்களில் மரம் நடுகைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ப.தெ.வ.அ.கூ.சங்கங்களைப் பொறுத்தவரையில் இத்திட்டம் அவர்களுக்கோ, அவர்களது சங்க அங்கத்தவர்களுக்கோ புதுமையானதொன்றல்ல. கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் ஆண்டுதோறும் சமாசம், கொத்தணிகள், சங்கங்கள் பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்து இலட்சக்கணக்கான பனம் விதைகளை பல்வேறு பகுதிகளிலும் நாட்டியுள்ளன. இத்திட்டத்திற்கு இந்நிறுவனங்கள் பெருந் தொகையான நிதியை செலவு செய்தது மட்டுமன்றி, சங்கங்களினால் பாதுகாப்பு வேலிகளும் போடப்பட்டு பனம் விதைகள் பாதுகாக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் அரசாங்கத்தின் தற்போதைய திட்டத்தின் கீழ் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் இவ்வாண்டு சித்திரை புதுவருடப் பிறப்போடு திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பலவிதமான பயன்தரு மரங்கள் நாட்டப்பட்டுள்ளன. யுத்த அனர்த்தங்களினால் பாதிப்புக்குள்ளான பெருந்தொகையான பனை தென்னை மரங்களுக்குப் பதிலாக அதே இன மரக்கன்றுகளும் புதிதாக நாட்டப்பட்டுள்ளன. இம்மரங்களை நாட்டுவதுடன் மட்டும் சங்கங்கள் நின்றுவிடாது அவற்றை நல்ல முறையில் பராமரித்து அதன் மூலம் கிடைக்கப்பெறும் பயனை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அனுபவிப்பதற்கேற்ற முறையில் நடந்துகொள்ளுவது அவசியமாகும்.

சமாசத்தை பொறுத்தளவில் முன்னைய கால அனுபவங்ளைக் கொண்டு தனது எதிர்கால செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லும் என்ற நம்பிக்கையை கூட்டுறவுத் திணைக்களத்திற்கு ஏற்படுத்தும் வகையில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக வளாகத்தில் கடந்த 15ம் திகதி பயன்தரு பழ மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டுள்ளமை இங்கு ஏனைய கூட்டுறவு நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக உள்ளமையும், மர நடுகைக்கு உரிய இடத்தை வழங்கியுள்ளமையும் பாராட்டுக்குரிய கைங்கரியமாகும்.

சமாசத்தால் ஏற்கனவே யாழ்.நகரின் மத்தியில் காங்கேசன்துறை வீதியில் யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் அனுசரணையுடன் விதைக்கப்பட்ட பனம் விதைகளில் சில இன்று பயன்தரக்கூடிய நிலையில் பனை மரங்களாகக் காட்சி தருவது கூட்டுறவாளர்களுக்கு பெருமையைத் தேடித்தரக்கூடிய ஒரு செயலாகும் என்பதை கற்பகம் இங்கு ஆணித்தரமாக கூறி வைக்கின்றது.

*"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"*

-ஆசிரியர்-

## பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
## கிளை நிர்வாக நடைமுறை விதிகள்

**16. செயலாளர்:-**

**16.1** கிளை நிர்வாக சபைக்கு செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். கிளைக் கூட்டங்களை அழைப்பதற்கு அதிகாரம் பெற்றுள்ள ஒருவர் அல்லது பலர் கோருமிடத்து செயலாளர் கிளைப் பொதுச்சபையினதும் கிளை நிர்வாக சபையினதும் கூட்டங்களைக் கூட்டலாம். அத்தகைய ஒவ்வோர் கூட்டத்திற்கும் இவர் சமுகமளித்து கூட்ட வரலாறுகளை பதிவு செய்து தலைவரால், அல்லது நிர்வாக சபையால் பணிப்பதற்கேற்ப மற்றும் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

**16.2** செயலாளர் கிளையின் ஒவ்வொரு உறுப்பினர் பெயரையும் அவர் அங்கத்துவம் பெற்ற திகதியையும், அல்லது அங்கத்துவம் இழந்த திகதியையும் காட்டும் உறுப்பினர் இடாப்பு ஒன்றை பேணி வருவதுடன் கிளை ஆவணங்களைப் பாதுகாப்பதற்கு பொறுப்பாய் இருப்பதுடன் நடைமுறை விதி 13, 17க்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதற்கு நிர்வாக சபை சார்பில் பொறுப்பாய் இருக்க வேண்டும்.

**17** இந்நடைமுறை விதி தொடர்பான மாற்றம், நீக்கம், மேலதிக புதிய சேர்க்கை என்பன கிளைப்பொதுச்சபையின் சிபார்சுடன் தாய்ச்சங்கத்தினதும் பொதுச்சபையினதும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினதும் முன்னனுமதியுடனேயே செயற்படுத்தப்படலாம்.

**18** இந்நடைமுறைவிதிகள் தொடர்பான சொல் விளக்கம், பொருள் விளக்கம் என்பவற்றில் ஏற்படும் கருத்து முரண்பாடுகள், ஐயப்பாடுகள் பற்றி இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கே உரியதாகும்.

இந்நடைமுறை விதி ........................ கிளைப் பொதுச்சபையில் சமர்ப்பித்து பரிசீலிக்கப்பட்டு ........................ திகதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இக்கிளைக்கு உரித்துடைய முறையான நடைமுறை விதியாக அனுமதித்து பதிவு செய்யப்படுகின்றது.

(முற்றும்)

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,**
**பனை. தென்னை வளம்),**
**யாழ்ப்பாணம்.**

## கூட்டுறவு இயக்கம் திசைமாறிப் போகிறதா?

கூட்டுறவின் தற்போதைய நிலைகள் பற்றி சிந்திக்கும்போது கூட்டுறவு ஆரம்பிக்கப்பட்ட நோக்கம் வேறு. இன்று கூட்டுறவின் நோக்கம் வேறாக திசைமாறிப் போகின்றது. 1972ம் அண்டு "கள் விற்பனைவுக் கூட்டுறவுச் சங்கம்" என்ற பெயரில் ஆரம்பித்து பிற்காலத்தில் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் எனவும், 1992ம் ஆண்டில் கூ.அ.உதவி ஆணையாளராக இருந்த உயர்திரு சபாரத்தினம் அவர்களின் செயற்பாடுகள் மூலம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயருடன் இன்றுவரை இயங்கி வருகின்றது.

1972ல் ஆரம்பமாகும்போது பாரிய சவால்களுக்கு மத்தியில் சளைக்காமல் எமது பணியாளர்கள் தங்கள் கடமைகளை திறம்பட நடத்தி வந்தனர். இதேவேளை இதன் அங்கத்தவரே இவ் அமைப்பிற்கு சவால்விட்டு நடந்தவற்றையும் நினைவுகூர வேண்டும். ஆனால் இன்று எமது சிந்தனைகள் ஒன்றுக் கொன்று முரண்பட்ட நிலையில் செல்வதையிட்டு சிந்திக்கும்போது வேதனை தருகின்றது. 37 வருடமாக கூட்டுறவுக்கு சவால்கள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது தெரிகின்றது. பழிவாங்கல்கள், வஞ்சம் தீர்த்தல், குழப்பத்தை ஏற்படுத்துதல், சங்கங்களுக்கு சங்கம் முரண்பாட்டினை வளர்ப்பது, விதண்டாவாதம் பேசுதல், பகைமைகளை ஏற்படுத்துதல் என்பன வலுப்பெற்று வருகின்றன். கூட்டுறவாளரே கூட்டுறவாளரை கொலை செய்யும் அளவுக்கு மோசம் அடைந்து விட்டது. கூட்டுறவு என்ற போர்வையில் தனிமனித ஆதிக்கம், ஆணவம், விட்டுக் கொடுக்காத தன்மைகள். இதற்குப் பெயர்தான் கூட்டுறவா? இனம், மதம், மொழிக்கு அப்பாற்பட்டதுதான் கூட்டுறவு. இதற்கு மாறாக இன்று கூட்டுறவுப் பணியாளர் பதவி உயர்வுக்கே தடை, முறைப்பாடு செய்தல் என்றெல்லாம் மனசாட்சிக்கு விரோதமான துரோகத் தன்மைகள் தலைவிரித்து தாண்டவம் ஆடத்தொடங்கி விட்டன.

(7ம் பக்கம் பார்க்க)

சென்ற இதழ் தொடர்ச்சி

இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து தனது தொழிற்பாடுகளை ஏனைய வகை கூட்டுறவு அமைப்புக்களுடனும், சமூகத்தில் காணப்படும் பல்வேறு அமைப்புக்களுடனும் போட்டியிட்டு பலம்மிக்கதாக மாற்றி அமைக்க வேண்டுமாயின் இப் பனை தெ.வ.அ.கூ. சங்கங்கள் தம்முடன் தொடர்புடைய சகல சமூகம்சார் உறுப்பினர், பயனாளிகள், பொதுமக்கள் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப பல்வேறு குடனும் அதேவேளை சமூகவியல் சிந்தனையுடனும் நோக்கல் பொருத்தப்பாடுடையதே.

இச்சங்கத்தின் உரிமையாளர் என்ற வகையில் முதலில் அங்கத்தவர்களை நாம் எடுத்து நோக்கின் இவர்களின் சமூகவியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் ஓர் விசுவாசம் மிக்க அங்கத்தவர்.

01. தனது உற்பத்திக்கு நியாய விலையும், உற்பத்தி அதிகரிப்புக்கேற்ப மாற்று பயன்பாட்டையும் எதிர்பார்ப்பர்.

02. தனது தொழிலுக்கு ஓர் பாதுகாப்பு தடுக்கப்படும் நிலையை அநேகர் விரும்பாத நிலையும், மன உணர்வும் பலரிடம் காணப்படல்.

06. இளம் வயதில் உள்ள பல உறுப்பினர் மத்தியில் தமது அறிவு விருத்தியும் மேலும் விரிவான அறிவை நிர்வாக நடவடிக்கை தொடர்பில் பெறவிரும்பும் மனநிலை.

07. அநேக அங்கத்தவர் மத்தியில் உற்பத்தியின் மாற்றுப்பயன் தொடர்பான புதிய சிந்தனைகள் இருப்பினும் அவை செயல்வடிவம் பெறக்கூடிய வகையில் சந்தர்ப்பங்கள் கிடைக்காமை.

# பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் எதிர்கால இலக்கு!

சிறப்பு அம்சங்களைக் கொண்டவையாக தொழிற்படல் மிகவும் தற்கால தோவையாகும்.

இங்கு சம்பந்தப்பட்ட சமூக உறுப்பினர்கள் எனக் கருதப்படுபவர்கள் சங்கத்தின் உரிமையாளரான அங்கத்தவர், இவற்றை வழிநடத்த ஆக்கபூர்வமான தீர்மானங்களை முன்வைக்கும் நெறியாளர்குழு உறுப்பினர்கள் இச்சங்கங்களின் அசையும் மூலதனமான பணியாட்களின் தொகுதியில் உள்ளடங்குவர். அதேவேளை பயனாளிகள் எனக் கருதப்படுபவர் இச்சங்கத்தின் உற்பத்திப் பொருட்களை நேரடி நுகர்வு செய்பவர்களும் மறைமுக பயனாளிகள் என்ற வகையில் சங்க சமூகத்தில் காணப்படும் அனைவரும் ஆகும்.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய அம்சம் யாதெனில், ஒவ்வொரு சாராரும் உயர் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் சமூகப் பொறுப்புடன் கூடிய ஓர் பணியை முன்னெடுத்தல் அவசியம். இவற்றை நாம் ஓர் பொருளாதார நோக் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

03. தனது பிரதான தொழிற்பாட்டை சமூகம் அங்கீகரித்து தனக்கென ஓர் கௌரவத்தை வழங்க வேண்டும். இது ஏனைய தொழிலுக்கு இருக்கும் மதிப்பு வழங்கப்படல் வேண்டும்.

04. தனது இளமைக் காலம் தொடக்கம் முதுமைவரை வாழ்நாள் ஜீவனோபாய தொழிலாகச் செய்து வருவதினால் தனது இயலாமையின் பின் தனக்கும் தன்னில் தங்கிவாழ்வோருக்கும் தொடர்சேவை வழங்கப்படுதலை விரும்புவது.

**திருமதி.கி.தவம்,**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**மானிப்பாய்.**

05. ஏற்கனவே பல வருடம் இத் தொழில் முயற்சியில் ஈடுபட்டு இருக்கும் உறுப்பினர் தமது பிள்ளைகளின்உயர் கல்விக்கு பின்னும் உயர் தொழில்வாய்ப்புக்களின் பின்னும் பிள்ளைகளாலேயே

இவ்வாறு உறுப்பினர் என்ற வகையில் தனிப்பட்ட சிந்தனை இருந்தாலும் தமது அமைப்பு திறம்படவும் நீண்ட ஆயுள் கொண்டதாகவும் அமைதல் வேண்டும் என்ற எண்ணமே பொதுவானதாக உள்ளது.

இவ்வாறு உறுப்பினர் எதிர்பார்ப்பு அமையும் அதேவேளை சமூக பொறுப்பற்ற ஒருசில அங்கத்தவராலும், இன்னுமே தம் நிலையை புரிந்துகொள்ளாத உறுப்பினராலும் இவர்களில் எதிர்பார்ப்புகளுக்கு சாவு மணி அடிக்கப்படுவதை நாம் அன்றாடம் எமது நடைமுறை தொழிற்பாட்டிலும் அவதானிக்கிறோம்.

அவை எவை என்பது தொடர்பிலும், இவர்களின் எதிர்பார்ப்பு தொடர்பிலும் ப.தெ.வ.அ.கூட்டுறவு அமைப்புக்களில் செயல்வடிவம் எவ்வாறு ஒழுங்கமைக்கலாம் எனவும் அடுத்த இதழில் நோக்கலாம்.

(வளரும்)

---

### ஆச்சரியமான கேள்விகளும் அதிசயமான பதில்களும்

- *உலகில் அதிகம் கசப்பானது எது?*
  வறுமை
- *மறு உலகில் மிகவும் இனிப்பானது எது?*
  சுவர்க்க வாழ்வு
- *தீமைகளில் மிகப்பெரிய தீமை எது?*
  பிறரின் மனதை நோக வைப்பதாகும்.
- *வானம், பூமி ஆகியவற்றைவிட மிகப் பெரியது எது?*
  நீதி தவறாமையும், உண்மை உரைப்பதும்.

### இலங்கையின் நெடுஞ்சாலைகள்

| | |
|---|---|
| A 1 | *கொழும்பு - கண்டி* |
| A 2 | *கொழும்பு - அம்பாந்தோட்டை* |
| A 3 | *கொழும்பு - புத்தளம்* |
| A 4 | *கொழும்பு - மட்டக்களப்பு* |
| A 5 | *பெரதெனியா - செங்கலடி* |
| A 6 | *அம்பேபுஸ்ஸ - திருகோணமலை* |
| A 7 | *அவிசாவளை - நுவரெலியா* |
| A 8 | *பானந்துறை - இரத்தினபுரி* |
| A 9 | *கண்டி - யாழ்ப்பாணம்* |
| A 10 | *கண்டி - கடுகஸ்த்த (புத்தளம்)* |

### சீனப்பெருஞ்சுவர்

இது 3700 மைல்கள் (5920 கி.மீ) நீளமானது. 20 அடி உயரமான இப்பெருஞ்சுவரில் 25ஆயிரத்திற்கு மேற்பட்ட கோபுரங்கள் உண்டு. இவை 40 அடி உயரமானவை. சீனச்சக்கரவர்த்தியான சின்சீகுயாங் என்பவரால் இது கட்டப்பட்டது. கி.மு. 3ம் நூற்றாண்டில் இக்கட்டுமானப் பணி ஆரம்பமாகியது. இலட்சக்கணக்கான மக்கள் இப்பணிக்கு பயன்படுத்தப்பட்டனர்.

## "இன்று பயிர் நடுவோம் நாளை பயன் பெறுவோம்" எனும் செயற்திட்டத்தின் கீழ் யாழ்.கூட்டுறவுத் திணைக்களம் முன்னெடுத்த மரநடுகை செயற்பாட்டின் ஓர் அங்கமாக ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள் மேற்கொண்ட மரம் நடுகையின் சில பதிவுகள்!



வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசம்



வலிகாமம் பனை தென்னை வள அ.கூ.ச.கொத்தணி



மானிப்பாய் பனை தென்னை வள அ.கூ.சங்கம்



யாழ்ப்பாணம் பனை தென்னை வள அ.கூ.சங்கம்



# குடும்ப முகாமைத்துவம் FAMILY MANAGEMENT

கணவன்-மனைவி, தாய்-தந்தை, மகன்-மகள், சகோதர-சகோதரிகள், மாமன்-மாமி, மைத்துனன்-மைத்துனி, பேரன்-பேத்தி, உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் போன்றோர் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள குடும்பம் என்ற பாரிய சமூக நிறுவனத்தை (Big Social and Family Institution) சிறப்பாக பரிபாலிக்க ஊன்றுகோலாகவுள்ள கருவூலமே (Treasure) குடும்ப முகாமைத்துவமாகும். எமது சமூகக் கட்டமைப்பில் கணவன் அல்லது தந்தையும், தந்தையைச் சிறுவயதில் இழந்த குழந்தைகள் வாழும் குடும்பங்களுக்கு தாயும் குடும்பத் தலைமைத்துவத்தின் தலைமைப் பதவியை வகிக்கின்றனர்.

குடும்பமென்ற சமூக நிறுவனத்தை நெறிப்படுத்தி வளப்படுத்தும் குடும்ப முகாமைத்துவமென்ற கருதுகோள் (Hypothesis) முகாமைத்துவக் கட்டமைப்பில் அதிக முதன்மை பெற்றதாக விளங்குகின்றது. முகாமைத்துவ வகைகளுக்குள் குடும்ப முகாமைத்துவமே குடும்ப சமூக மறுமலர்ச்சிக்கு (Family and Social Renaissance) ஊன்றுகோலாக அமைந்துள்ளது. குடும்பம், சமூகம் என்ற மனித அமைப்புக்களை சிறப்பாக வடிவமைப்பது குடும்ப முகாமைத்துவத்தின் முக்கிய குடும்ப, சமூகப் பொறுப்பாகும்.

## குடும்ப முகாமைத்துவத்தின் முக்கிய தொழிற்பாடுகள் The Important Functions of Family Management

1) குடும்பத்திற்கு தேவையான இருப்பிடம் (Location), பொருளாதாரப்பலம் (Ecconomics Power), குடும்பக்கௌரவம் (Family Dignit), பண்பாடு (Culture), பழக்க வழக்கங்கள் (Habits), கூட்டு வாழ்வு (Joint Life), கூடி வேலை செய்தல் (Joint Work), கூட்டுறவு (Co-Operative), ஒற்றுமை (Unity) ஆகியவற்றை குடும்பத்திலும், சமூகத்திலும் உருவாக்கி மேலோங்கச் செய்வது குடும்ப முகாமைத்துவத்தின் முக்கிய தொழிற்பாடாகும்.

2) குடும்ப, சமூக உறுப்பினர்கள் அனைவரையும் மனிதத் தன்மையுள்ள உயர்ந்த மக்களாகவும் (Humanity), மனிதத் தன்மைமீது பற்றும் (Liking), பாசமும் (Loving), விசுவாசமும் (Faifhul), இரக்கமும் (Kindly), பிரியமும் (Dearly), மனித நேயம் (Humanitarianism), நிறைந்த இலட்சியவாதிகளாக (Idealistics), உருவாக்குவது குடும்ப முகாமைத்துவத்தின் முக்கிய தொழிற்பாடாகும்.

3) குடும்ப சமூக மக்கள் அனைவரையும் போதிய அறிவுடையவர்களாகவும் (Enough Knowledgeable), திறமையுடையவர்களாகவும் (Ability), ஆளுமையுடையவர்களாகவும் (Personality), நேர்மையும், வாய்மையும் உள்ளவர்களாகவும் (Honest and Sincere), நற்பண்பும் நல்லொழுக்கமும் (Excellent Moral Charter), பொறுப்பும் (Responsibility) உடைய உயர்ந்த மக்களாக உருவாக்குவது குடும்ப முகாமைத்துவத்தின் முக்கிய கடமையாகும். தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என்ற பழமொழிக்கும், புதுமொழிக்கும் அமைய சிறு வயதிலிருந்தே குழந்தைகளை நன்மக்களாக உருவாக்குவது குடும்ப முகாமைத்துவத்தின் கருவாகும்.

4) மனிதன் பிறந்த நாள்முதல் இறக்கும் வரை குடும்பத்தினதும், சமூகத்தினதும் பாதுகாப்பிலே சீரும், சிறப்புடனும் வளமாக வாழ்கின்றான். குழந்தைகள் பிறந்து வளர்ந்து பொறுப்புள்ள பண்பட்ட மனிதர்களாக உருவாக குறைந்தது இரு தசாப்தங்கள் தேவைப்படுகின்றது. சிறுவர்களைப் பாதுகாத்து, கல்வியும், நற்பண்புகளும் போதித்து பொறுப்புள்ள சிறந்த மனிதர்களாக உருவாக்குவது குடும்ப முகாமைத்துவத்தின் முக்கிய கடமையாகும். இன்று சமூக விரோதிகளின் அச்சுறுத்தல்களினால் லட்சக்கணக்கான சிறுவர்கள் அகதி முகாம்களிலும், சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலும் சரணடைந்து அவதிப்படுகின்றனர். இவர்களைப் பாதுகாத்து புனர்நிர்மானம் (Rehabilitation) செய்து காப்பாற்றவேண்டிய பாரிய பொறுப்பு குடும்ப முகாமைத்துவத்தின் கரங்களில் தான் உண்டு.

5) குடும்பத்திலும், சமூகத்திலுமுள்ள வேலையற்ற, வாழ்வற்ற வாலிபர்களுக்கும், யுவதிகளுக்கும் வேலை வாய்ப்புக்களையும், வருமானத்தையும் போதிய மட்டில் பெற்றுக்கொடுத்து ஆணையும், பெண்ணையும் இணைத்து மணவழிக் குடும்பத்தை உருவாக்கி (Conjugal Family) அவர்களுக்கு பொருளியல், வாழ்வியல், உயிரியல், உளவியல், பண்பாட்டியல், பாலியல் தேவைகளை கௌரவமான வழிகள் மூலம் முழுமையாக நிறைவு செய்வது (Complete Saving) குடும்ப முகாமைத்துவத்தின் முக்கிய பங்கு பணிகளாகும்.

6) குடும்ப, சமூக, பண்பாட்டு நலன்களுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வயது முதிர்வடைந்து தள்ளாடும் நிலையில் வாழவழியின்றி அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் எம்மை வளர்த்தெடுத்த முன்னோரைப் பாதுகாத்து அரவணைத்து அவர்களுக்கு பாதுகாப்பு வாழ்வளிப்பது (Security Life) குடும்ப முகாமைத்துவத்தின் தலையாய கடமையாகும்.

7) குடும்ப, சமூக, பண்பாட்டு ஒழுங்கீனங்களுக்கு மூலகாரணமாக உள்ள சுயநலமிகளையும் (Selfichness) நேர்மையற்ற வஞ்சகர்களையும் (Fradulentn) திருட்டுக் குணமுடையோரையும் (Thievish) பயங்கரவாதிகளையும் (Terrorist) நன்மக்களாகவும், மனிதப் பண்பு பொருந்தியவர்களாகவும் (Humane) உருவாக்குவது குடும்ப முகாமைத்துவத்தின் முக்கிய தொழிற்பாடாகும்.

8) தந்தை-மகன்-மகள், தாய்-மகன்-மகள், சகோதர-சகோதரிகள், பேரன்-பேத்தி, பூட்டன்-பூட்டி போன்ற இனப்பெருக்கத்தையும், சந்ததி விருத்தியையும், மரபுத் தொடர்ச்சியையும் சந்ததி சந்ததியாக அபிவிருத்தி செய்து பேணிக்காப்பது குடும்ப சமூக முகாமைத்துவத்தின் முக்கிய கடமையாகும்.

9) குடும்ப உறவையும், சமூக உறவையும் பேணக்கூடிய மனித உறவு முறைகளையும், குடும்ப சமூக உறவுமுறைகளையும், வரலாற்று ரீதியாக அபிவிருத்தியடைந்துள்ள பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் பேணிக்காத்து மனித சமுதாயத்தை சாதி, இன, மத, பிரதேச, சமூக வேறுபாடுகளிலிருந்து முற்றாகப் பாதுகாத்து, மனித வாழ்வை வளம்படுத்துவதும் சகல வசதிகளையும் கொண்ட நவீன வாழ்வாக (Modern Life) மலரச் செய்வது குடும்ப, சமூக முகாமைத்துவத்தின் முக்கியமான பங்கு பணிகளாகும்.

10) குடும்ப முகாமைத்துவம் குடும்ப உறுப்பினர்களின் பிற்கால நலன்களுக்கென பெருந்தொகையான செல்வத்தை மூடி வைத்துள்ளது. இது குடும்ப உறுப்பினர்களின் பரம்பரைச் சொத்தாக (Inheritance) விளங்குகின்றது. இப்பரம்பரைச் சொத்து குடும்ப உறுப்பினர்களுக்கு நோய், இயலாமை, வறுமை, வேலையின்மை, முதிர்வு போன்ற இடர்கள் நேரும்போது பாதுகாப்புக் கருவாக விளங்குகின்றது. எல்லாக் குடும்பங்களிலும் பெருந்தொகையான காணிகள், வீடுகள், சொத்துக்கள், நகைகள், பணம், தளபாடங்கள், பாவனைப் பொருட்கள் குவிந்து கிடக்கின்றன.

(7ம் பக்கம் பார்க்க)

ஆக்கம்: திரு.இ.சுப்பிரமணியம் B.A
(இளைப்பாறிய அதிபர், கூட்டுறவு வலயக்கல்லூரி)

## உதவி செய்ய முன்வருவாயோ கூட்டுறவே!

வளங்கள் பல இருந்தும்
வாழ வழியின்றி
பரிதவிக்கும் எங்கள் உறவுகள்
பசியும் பட்டினியும் மலிந்து கிடக்கும்
இவ்வுலகில்..
உயிருக்கு உலை வைக்கும்
யுத்தத்தினால் விலை மதிப்பில்லா
மனித உயிர்கள் விரைவாய்
போக்கி வரும் யுத்தமேனோ?

ஊரைவிட்டு உறவை விட்டு
உயிர் காக்க பாதுகாப்புத் தேடி
பாதுகாப்பென்று நம்பியே
இடம் மாறியும் பலன் ஏது?

இடம் மாறி திசை மாறி
கண்ட பலன் உயிர் இழப்பு
உறவிழப்பு கால் இழப்பு கை இழப்பு
இதுதான் மனித வாழ்க்கையா?

கணவனை இழந்த விதவைகளும்
தாய் தந்தையை இழந்த பாலகரும்
மனைவியை இழந்த கணவனும்
கண்டது என்ன ஒப்பாரியே!

இதைக்கண்டு யார் உணர்ந்தார்
வெறும் வார்த்தையில் கவலை
தெரிவித்தும்
வீரம் பேசியும் பலன் உண்டோ!
உறவிழந்த உறவுகள்
நிலையறிந்து உதவ யார் வந்தார்
உணர்விருந்து இந்நிலையறிந்து
உதவ முன்வருவாயோ கூட்டுறவே!

க.மெய்யழகன்,
தலைவர்,
வலி.கொத்தணி

## இறைவன் தந்த இனியவள்!

இயற்கை என்னும் இளையவள்
இறைவன் தந்த இனியவள்
மயக்குகின்ற மது அவள்
வியக்க வைக்கும் எழிலவள்

காலையில் சேவல் கூவுவதும்
சோலையில் குயில்கள் பாடுவதும்
மாலையில் மனங்கொள் காட்சிகளும்
மங்கை தந்த கொடையல்லவா?

கவிஞர் மனதில் நிற்பவள்
கலை யழகு மிக்கவள்
புவியில் அவள் போல்
புதுமைகள் படைக்க யாருளர்

கண்ணில் காணும் காட்சி யாவும்
கன்னி தந்த காட்சியே
மண்ணில் இவள் பெருமை
மதிப்பிட முடிவதில்லையே

தளிர்த்திடும் தளிர் கொடியாள்
தலைவனைத் தாவி அணைத்து
கவிஞரின் கற்பனைக்கு உரமிட்டு
கவிதைக்கு உயிர் கொடுப்பாள்

எம்.தியாகராஜா
லிகிதர்,
கொடிகாமம் ப.நெ.வ.அ.கூ.ச.

## கவியின்பம்

## கதிரவன் உதயமாகின்றான்!

ஏழுவர்ணப் புரவி பூட்டி
நீலவானில் பவனி வந்தான் சூரியன்
கதிரவன் வரவு கண்டு இருள் மறைய
அல்லியும் தாமரையும் மொட்டவிழ
மல்லிகையும் முல்லையும் வாடிப்போக
கிழக்கு வெளுத்து கீழ்வானம் சிவக்க
உதயமாகிறான் உதயசூரியன்
சேவல் கூவ பறவைகள் குரல்களில்
கீதம் இசைக்க ஆலயமணியோசை
தென்றலில் சங்கமிக்க
பள்ளிச் சிறார்கள் சீருடை அணிந்து
வெண்புறாக்கள்போல் பறந்து செல்ல
கதிரவன் அண்ட வெளியில்
உதயமாகிறான்

-சி.ஜெறோஷா-
நல்லூர்

## பூக்காத பூக்கள்!

| | |
|---|---|
| மனிதனின் புகழ்ப் பூ | - சிறப்பு |
| காலையில் வரும் பூ | - விழிப்பு |
| சமயலறையில் உள்ள பூ | - அடுப்பு |
| ஒளியைத் தரும் பூ | - நெருப்பு |
| சுவையைத் தரும் பூ | - உப்பு |
| கோபத்தில் வரும் பூ | - வெறுப்பு |
| பாதங்களைக் காக்கும் பூ | - செருப்பு |
| சிறுவர்கள் செய்யும் பூ | - குறும்பு |
| அனைவர்க்கும் வேண்டிய பூ | - அன்பு |

## நிம்மதி!

நிச்சயமற்றவொன்றை
நிரந்தரமானதென்று
நித்தம் நித்தம் மனதினிலே
நினைத்துக்கொண்டு
நிலையில்லா இவ் வாழ்வில்
நிம்மதியின்றி அலைகிறாயே மனிதா

நில்! நிம்மதி என்பது
நின் மனதினிலே உள்ளதடா!
நினைத்து நீ வாழ்வில்
நிம்மதி அடைவாய்!

—பீ.பிறேம்—
திக்கம் வடிசாலை

### கற்பகம் வாசகர்களுக்கு அன்பான வேண்டுகோள்!

கற்பகம் திங்கள் இதழுக்கு கவிதை, கட்டுரை எழுதுபவர்கள் தங்கள் ஆக்கங்களை ஆசிரியர், கற்பகம், சமாசப் பதிப்பகம், இல.499, காங்கே சன்துறை வீதி, யாழ்ப்பாணம் அல்லது தாங்கள் வசிக்கும் இருப்பிடங்களுக்கு அருகிலுள்ள ப.நெ. வ.அ.கூ.சங்கங்கள் ஊடாகவோ அனுப்பி வைக்கலாம். பிரசுரத்திற்கு உகந்தவை அவ்வப் போது பிரசுரிக்கப்படும்.

# கணக்காய்வு

--சென்ற இதழ் தொடர்ச்சி--

**கணக்காய்வு வரைவிலக்கணம்**

நிறுவனம் ஒன்றின் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் தெளிவாகவும் சரியாகவும் கணக்கியல் கோட்பாடுகளுக்கமைய கணக்கேடுகளில் பதியப்பட்டுள்ளதா என்பதையும், அக் கொடுக்கல் வாங்கல்கள் யாவும் நிறுவனத்தின் சட்டம் விதி, நடைமுறை விதி, நிறுவனத்தின் கொள்கை, கோட்பாடு நோக்கங்களுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும், சகல கொடுக்கல் வாங்கல்களும் உண்மையாகவும் சரியாகவும் உறுதிச்சிட்டைகள் மூலமும் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்பதையும் குறித்த நிதி ஆண்டிற்கான நிறுவனத்தின் இறுதிக் கணக்குகளை ஐந்தொகைகள் உண்மையான மீதிகளைக் கொண்டுள்ளதா என்பதையும், சொத்துக்கள், பொறுப்புக்கள் சரியான பெறுமதியில் செய்யப்பட்டுள்ளதா என்பதையும் சுயேட்சையாக எவரது கட்டுப்பாடுமின்றி நிறுவனத்தின் கணக்குகளையும் ஆவணங்களையும், உறுதிச்சிட்டைகளையும் ஒப்பு நோக்கி பரிசோதனை செய்து மெய்மையிடுதல் மூலம் தான் திருப்தியடையக் கூடிய வகையில் அல்லது திருப்தி அடையாவிட்டால் எக் காரணத்தினால் திருப்தியடையவில்லை என்றும் தனது ஆலோசனையுடனும் விதந்துரையுடனும் சமர்ப்பிக்கும் அறிவியலே கணக்காய்வு ஆகும்.

*திருமதி வி.மாலினி*
*வலிகாமம் கொத்தணி*

**கணக்காய்வின் வகைகள்**

கணக்காய்வின் வகைகளை இரண்டாகப் பிரிக்கலாம்.

01. அகக் கணக்காய்வு.
02. புறக் கணக்காய்வு

இவற்றிலே புறக் கணக்காய்வை மேலும் இரு வகையாகப் பிரிக்கலாம்.

01. தனிக் கணக்காய்வு.
02. நியதிக் கணக்காய்வு (சட்டக் கணக்காய்வு)

**தனிக் கணக்காய்வு**

பங்குடமைகள், கம்பனிகள் போன்றவற்றில் நடைபெறுவது.

**நியதிக் கணக்காய்வு**

01. தொடர் கணக்காய்வு.
02. முடிந்த கணக்காய்வு.
03. இடைக்காலக் கணக்காய்வு.
04. விசேட கணக்காய்வு.
05. ஆழ்ந்த கணக்காய்வு.
06. ஆழமில்லாத கணக்காய்வு.

**அகக் கணக்காய்வு**

ஒரு நிறுவனத்தின் நிர்வாகத்திற்கு தேவையான உதவிகளைப் புரிவதற்காகவும், நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகளை நாளாது திகதியாக ஒழுங்காக மதிப்பீடும், பரிசோதனையும் செய்து நிர்வாகத்திற்கு தேவையான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நிறுவனத்தின் பணியான கோட்பாட்டிற்கு அமைய நிறுவனத்தினால் நியமிக்கப்பட்டு கடமை, பொறுப்பு, அதிகாரம், சம்பளம் ஆகிய வற்றை வழங்கி நியமிக்கப்பட்ட பணியாளர் ஒருவரே அகக்கணக்காளர் ஆவார். அவரின் உதவியாளர்களால் நாளாந்தம் நிறுவனத்தின் கணக்குகளும், பதிவேடுகளும் ஒழுங்காகவும் உண்மையாகவும் பேணப்படுகின்றனவா, என்பதையும் சொத்துக்கள் சரியாகக் காணப்படுகின்றனவா என்பதையும் உறுதி செய்வதற்கும் அவை சம்பந்தமாக ஆலோசனைகள் கூறுவதற்கும் நியமிக்கப்பட்டவர். ஆனால் தற்காலத்தில் அகக்கணக்காய்வாளரின் கடமைகளும் பொறுப்புக்களும் அதிகமாக்கப்பட்டுள்ளது. கணக்கியலிலும் நிதியிடலிலும் சம்பந்தமான செயல்முறையினை மறுசீரமைப்பு செய்வது மட்டுமல்லாது வியாபாரத்தின் ஒவ்வொரு நடவடிக்கை சம்பந்தமாகவும் நிர்வாகத்திற்குத் தகவல் கொடுப்பதனூடாக அகக்கணக்காய்வு நோக்கத்தினை நிறைவு செய்யலாம்.

(வளரும்)

---

**கூட்டுறவு.... 2ம் பக்க தொடர்ச்சி**

இதை யார் சிந்தித்தார்கள், தீர்த்து வைத்தார்கள்? இதற்கு மாறாக ஒவ்வொருவரை குறைகூறிக்கொண்டு இருந்து எந்தப் பயனும் இல்லை. விஞ்ஞான உலகத்தில் கூட்டுறவு வளர்ச்சியடையவேண்டிய நிலையில் கூட்டுறவைத் தெரிந்த நாமே மனச்சாட்சி இல்லாது நடந்து வருகின்றோம். வெறும் மேடைப்பேச்சாக இருக்காமல் மன மாற்றத்தின் மத்தியில்தான் பலன் கிடைக்கும். இதை உண்மையான கூட்டுறவாளனுக்கு நாம் கூறத்தேவையில்லை. இப்படியான விரோத செயற்பாடுகளையும், முரண்பாடுகளையும் நாம் அனைவரும் கைவிட்டு கூட்டுறவை நம்பி இருக்கும் கூடடுறவுச் சங்கத்திற்கும் அதனை நம்பியிருக்கும் குடும்பங்களுக்கும் உதவுவதோடு, இன்றைய நாட்டின் சூழலையும் கருத்தில்கொண்டு வருங்காலத்தில் எமது நாட்டில் கூட்டுறவே தனித்தன்மையுடனும் தனித்துவமாகவும் வீறுநடைபோட்டு மக்களுக்கு சேவை செய்யவேண்டும். கூட்டுறவில் ஏழு கொள்கைகள் உண்டு. இதில் ஜனநாயக அங்கத்துவமும் கட்டுப்பாடும், சமூகத்தின் மீதான அக்கறை ஆகிய கொள்கைகளுக்கமையவாவது நாம் செயற்பட வேண்டும். இதற்கமைய மனச்சாட்சி உடையவர்கள் மனம் மாறினால் தடைகளை உடைத்தெறியலாம். அடிமைத் தனத்திலிருந்து விடுபட முடியும். கூட்டுறவாளரே! ஒன்று சேருங்கள்! துணிந்து நில்! தொடர்ந்து செல்! தோல்வி கிடையாது! என்பதற்கமைய நாம் செயறபட்டு எதிர்காலத்தில் கூட்டுறவுச் சமூகத்திற்கும் நாட்டுக்கும் உயர்விற்காக உழைப்போம்.

**க.மெய்யழகன்,**
**தலைவர்,**
**வலி.கொத்தணி**

**குடும்ப ..... 5ம் பக்க தொடர்ச்சி**

இவை அனைத்தும் குடும்பத்தினதும், குடும்ப முகாமைத்துவத்தினதும் மாபெரும் சாதனைகளே.

11) குடும்ப முகாமைத்துவத்தின் சாதனைகளினால் குடும்பம் ஒரு செல்வக்களஞ்சியமாகவும் (Treasure of Wealth) உற்பத்திப் பொருட்களையும் சேவைகளையும் அனைவருக்கும் பங்கிடும் பங்கீட்டுக் களஞ்சியமாகவும் (Ware House of Distribution) விளங்குகின்றது. குடும்பத்திற்குத் தேவையான செல்வத்தையும், உற்பத்திப் பொருட்களையும் தோற்றுவிக்கும் முக்கிய கடமை குடும்ப முகாமைத்துவத்தினுடையதாகும்.

12) குடும்ப, சமூக உறுப்பினர்கள் அனைவரையும் குடும்ப மயமாக்கல் (Familylization), சமூக மயமாக்கல் (Culturelization) போன்ற அம்சங்களையுடைய ஒன்றுபட்ட மக்களாக உருவாக்குவது குடும்ப முகாமைத்துவத்தின் முக்கிய கடமையாகும்.

13) சிக்கல்களும், இடர்களும் நிறைந்த மனித உறவுகளையும், குடும்ப உறவுகளையும், சமூக உறவுகளையும், உலக நாடுகளுக்கிடையிலான நல்லுறவுகளையும் இலகுபடுத்தி, நுட்பமயப்படுத்தி, நவீனமயப்படுத்தி உலக மனித சமூகத்தை மேம்படுத்துவது குடும்ப சமூக முகாமைத்துவத்தின் முக்கிய பங்கு பணிகளாகும்.

**வளர்க குடும்ப முகாமைத்துவம்!**

## துயர் பகிர்கின்றோம்!

மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் தலைவரும், யாழ்.மாவட்ட சித்தமருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமாகிய **அப்புத்துரை–சரவணபவனின்** பாசமிகு தாயார் கடந்த 07.04.2009 அன்று மரணமடைந்த தையிட்டு ஆழ்ந்த துயரடைந்திரு க்கும் அவர்தம் குடும் பத்தினரின் துய ரில் நாமும் பங்கு கொள்வதோடு. அமரரின் மறைவு க்கு எமது கண் ணீர் அஞ்சலியைக் காணிக்கையா க் குகின்றோம்.



**அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.**

## வில்வம் இலை



சிவ சிவா என போதுமான உடல் உழைப்பின்றி ஆலயத்தில் சிவலிங்க பூஜை செய்து கொண்டு இருந்தால் உடல் நலம் தொடர்ந் திருக்காது. தக்க உழைப்பிற்குப் பின்னர் சிவனுக்கு உகந்ததாகக் கூறும் வில்வ இலைகளை அவ்வப் போது நான்கைந்து மென்று விழுங்கி, உணவை யும் உட்கொண்டு வந்தால், நல்ல முறையில் ஜீரணமடைந்து உணவின் முழுச் சக்தியையும் உடல் பெறும். உடலின் கண் இருக்கும் விஷத் தன்மையையும் நீக்கும்.


**பனை, தென்னை வளம் பெருக்கி பாரினிலே சிறப்பெலாம் பெற்றிடுவோம்**

**அனைத்து கூட்டுறவாளர்களுக்கும் எமது தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

**இதோ வாடிக்கையாளர்களுக்காக.....**

- பனை, தென்னைசார் நுகர்பொருள் விற்பனை.
- கூட்டுறவுக் கிராமிய வங்கிச் சேவை.
- இருசக்கர உழவு இயந்திரச் சேவை.
- கதிரை வாடகைச் சேவை.
- அங்கத்தவர் நலத்திட்டங்கள்.

**கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்** (வ–து)

பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். T:P: 021 222 7007

எமது சங்கத்தின்,
உறுப்பினர்கள்,
பணியாளர்கள்,
மகளிர் உறுப்பினர்கள்,
வங்கி வாடிக்கையாளர்கள்,
நுகர்ச்சியாளர்கள்,
நலன்விரும்பிகள்
மற்றும் சகோதர நிறுவனங்கள்
ஆகிய அனைவருக்கும் எமது
இதயம் கனிந்த விரோதி வருட
புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்!

**கிராமிய வங்கி**

மலர்ந்துள்ள புத்தாண்டில் அரிய பல நலன் ஓங்கும் திட்டங்களை உங்களுக்காக அறிமுகப்படுத்தும் எமது கிராமிய வங்கியுடன் இணைந்து பயன் அடையுங்கள்!

**அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

15, நடுத்தெரு லேன்,
அரியாலை.
T:P: 021 222 6336


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2009ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டது.